பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆணி 15 | சனிக்கிழமை | 31.08.2024 | அதிர்வு 029

## புதிய அரசியல் கூட்டணி செப். 5 ஆம் திகதி உதயம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து பிரிந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகள் 06



### சூடுபிடிக்கும் ஜனாதிபதித் தேர்தல்

# பிரதான வேட்பாளர்களை சந்தித்த அஜித் டோவல்!

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்துள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். எனினும், அவர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான வேட்பாளர்களைச் சந்தித்துத் தேர்தல் தொடர்பில் பேசியுள்ளமை கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்தவகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. 06

## தமிழ்ப் பொது வேட்பாளருக்கே ஆதரவு தமிழரசின் கிளிநொச்சி கிளையும் முடிவு



வரும் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனை ஆதரிப்பது என்ற தீர்மானம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையில் 05



கடந்த 27 , 28ஆம் திகதிகளில் (திங்கள், செவ்வாய்க்கிழமைகளில்) கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. இவை தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலையும் மீறி நடத்தப்பட்டிருக்கின்றன என்பது ஆணைக் குழுவின் கடிதம் மூலம் இப்போது உறுதியாகியிருக்கின்றது.

இத்தகைய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை தேர்தல் சமயத்தில் நடத்தலாமா என்பது தொடர்பில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எழுதி விவரம் கோரிய விடயத்துக்கு கடந்த 23ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு பதில் வழங்கியுள்ளது.

அதில் –

கடந்த ஓகஸ்ட் மூன்றாம் திகதி நடைபெற்ற அரசு அதிபர்களின் 06



# தேர்தல் கடமைகளில் 54,000 பொலிஸார்

ஜனாதிபதித் தேர்தலுக்காக சுமார் 54, 000 பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் இடம்பெறும் சட்டவிரோத தேர்தல் பிரசார செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருவதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சட்டவிரோத பதாகை மற்றும் சுவரொட்டிகளை அகற்றுவதற்காக 15,000 பணியாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுவரை 15,900 சட்டவிரோத சுவரொட்டிகள் அகற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# தபால் மூல வாக்குகளைப் பதிவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்குகளைப் பதிவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்பான விவரங்களைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் செப்டம்பர் மாதம் 4 ஆம் திகதி மாவட்டச் செயலகங்கள் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகங்களில் தபால் மூல வாக்குகளைச் செலுத்த முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் செப்டம்பர் 4 ஆம், 6 ஆம் திகதிகளில் சிரேஷ்ட உதவி மற்றும் உதவி பொலிஸ் அலுவலகங்கள், பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், பொலிஸ் நிலையங்கள், விசேட அதிரடிப்படை முகாம்கள் மற்றும் விசேட பொலிஸ் பிரிவுகள் என்பனவற்றிலும் தபால் மூல வாக்களிப்பைப் பதிவு செய்ய முடியும்.

எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் முப்படை முகாம்கள் மற்றும் ஏனைய அனைத்து அரச நிறுவனங்களிலும் தபால் மூல வாக்குகளைப் பதிவு செய்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனிடையே, தபால் மூல வாக்குகளை மேற்படி தினங்களில் செலுத்த முடியாதவர்களுக்குச் செப்டம்பர் 11 ஆம் மற்றும் 12 ஆம் திகதிகள் வாக்களிக்க மேலதிக தினங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன.




# இலங்கையில் கலப்பு முறை எரிசக்தி வேலைத்திட்டம்

இலங்கையின் நெடுந்தீவு, நயினா தீவு மற்றும் அனலைத்தீவு பகுதிகளில் ஹைபிரிட் எனப்படும் கலப்பு முறையில் முன்னெடுக்கப்படவுள்ள எரிசக்தி வேலைத்திட்டத்திற்கான முதலாவது கொடுப்பனவு இந்தியாவால் வழங்கப் பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தா னிகர் சந்தோஷ் ஜாவினால், எரிசக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலா ளர் சுலக்ஷன ஜயவர்தன மற்றும் இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் சேபாலவிடம் மேற்படி கொடுப்பனவு கையளிக்கப்பட்டதாக இந்திய உயர்ஸ்தா னிகராலயம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடக்கு பகுதியில் உள்ள குறித்த 3 தீவுகளில் மின்சக்தி தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கில், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவும் இலங்கையும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டன.

இதனையடுத்து இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகார சபையினால் தனியார் நிறுவனத்துடன், கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

அதற்கமைய, நெடுந்தீவு, நயினா தீவு மற்றும் அனலைத்தீவு பகுதிகளில் முதற்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

இந்தத் திட்டத்தை அடுத்த வருடம் மார்ச் மாதத்தின் ஆரம்பத்தில் நிறை வறுத்த எதிர்பார்க்கப்படுகிறது.



# ஜனவரி முதல் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும்

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், அரச ஊழியர்களின் குறைந்த பட்ச சம்பளம் 55,000 ரூபாவாக உயர்த்தப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இத னைக் கூறியுள்ளார்.

அரசாங்கம் தயாரித்துள்ள வரவு – செலவு திட்டத்துக்கு அமைய தேவை யான ஏற்பாடுகளை வழங்கும் முறைக ளின் ஊடாக ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.



# காட்டு யானை ஒன்றைக் கொன்று எரித்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் கைது

நிக்கவரட்டிய கொடுஅத்தாவல பிரதேசத்தில் காட்டு யானை ஒன்றை கொன்று எரித்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த காட்டு யானை பல நாள்களுக்கு முன்னர் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்டிருந்த மின்கம்பிகளில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் உயிரிழந்த காட்டு யானையை எரித்து எஞ்சிய பாகங்களை கொடுஅத்தாவல பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் புதைத்துள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் செல்ல முயன்றுள்ள நிலையில் குருநாகல் பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

47 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபருக்கு எதிராக நிக்கவரட்டிய நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.



# இறைவரித் திணைக்கள அதிகாரிகளை போன்று செயற்பட்டு பண மோசடி செய்த இருவர் கைது

உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகளை போன்று செயற்பட்டு பண மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அளுத்கம – தர்கா நகரில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வர்த்தக நிலையங்களில் வருமான வரியை அறவிட்ட சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் பிரதேச மக்களால் அளுத்கம பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாகவே சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகளை போன்று நடித்து மக்களை ஏமாற்றும் மோசடிகள் தொடர்ச்சியாகவே இடம்பெற்று வருவதால் இது தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# வவுனியா – மன்னார் வீதி விபத்தில் யாழ். இளைஞர் ஒருவர் உயிரிழப்பு




**(கே.வசந்தன்)**

வவுனியா – மன்னார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார். அத்துடன் மற்றொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா – மன்னார் வீதியில், பூவரசன்குளம், குருக்கள் புதுக்குளம் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மன்னாரில் இருந்து வவுனியா நோக்கி வந்த கூலர் ரக வாகனமும், வவுனியாவில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற மோட்டர் சைக்கிளும் பூவரசங்குளம், குருக்கள் புதுக்குளம் பகுதியில் பயணித்தபோது நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டர் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றொரு இளைஞர் படுகாயடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரமனாத் சிவாகரன் (வயது 30) என்ற இளைஞரே மரணமடைந்தவராவார்.

செல்லத்துரை கிருஷ்ணபாலன் (வயது 37) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழ்ப் பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் உப தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சருமான தம்பிராசா குருகுலராஜாவின் தலைமையில், மாவட்டக் கிளை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்களின் பங்கேற்போடு நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள மத்திய செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதனடிப்படையில், மத்திய செயற்குழுவுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜாவுக்கு நேரில் சமர்ப்பிக்கப்படவுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“எதிர்வரும் 2024.09.21ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில், உள்நாட்டு தமிழ் வாக்காளர்களிடையேயும், புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் மத்தியிலும், அரசியல் கட்சிகளுக்குள்ளும் எழுந்துள்ள பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஆழமாகவும், விசாலமாகவும் கருத்தூன்றி ஆராய்ந்து, பொருத்தமான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டிய நிலைக்கு காலம் எம்மை நிர்ப்பந்தித்திருக்கின்றது.

அதனடிப்படையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினராகிய நாங்கள், கட்சியினுடைய இணக்க விதிகளுக்கு உட்பட்டு, மாவட்டத்தின் பல்வேறு தரப்பினருடனும், சிவில் சமூகம் மற்றும் மதகுருமார்களுடனும், பொதுமக்களுடனும் அவ்வப்போது கலந்துரையாடி பெறப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில், 2024.08.30 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டக் கிளையாக ஒன்றிணைந்து, ஏகமனதாக எடுத்த கீழ்வரும் தீர்மானத்தை, மத்திய செயற்குழுவின் தழுவு அனுமதிக்காக தயவுடன் முன்னளிப்புச் செய்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்ற நிலைப்பாட்டை பொறுப்போடு ஆராய்ந்து, நிகழ்கால இலங்கையினுடைய ஆட்புல ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில், தமிழ் மக்களினுடைய இனத்தேசிய அடிப்படையில் நின்று பொருத்தமான உபாயம் ஒன்றை நாம் சிந்திப்பது காலத்தேவையானது என்று நம்புகின்றோம்.

போருக்குப் பிந்திய 15 ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில், எதிர்பார்க்கப்பட்ட நற்பலன்களை விட பிரதிகூலமான வெளிப்பாடுகளையே தமிழ்மக்கள் அனுபவிக்க நேர்ந்திருக்கிறது என்பது கசப்பானது. எனினும், அதுவே உண்மையானது ஆகும். போர் ஒன்றின் பின்னராக தோல்வியடைந்த மனநிலையில் விடப்பட்ட தமிழ்ச் சமூகத்தை அதிலிருந்து மீட்டெடுக்கும் பணியையே எமது அரசியல் இயக்கம் பிரதான பணியாகக் கொண்டிருந்தது. எனினும், உள்நாட்டுக்கு உள்ளேயும், சர்வதேச சமூகத்தோடு இணைந்தும், எமது இராஜதந்திர, புத்திபூர்வமான அணுகுமுறைகள் ஊடாகவும் எமது மக்களின் வலிகளுக்கு நிவாரணம் வழங்கவோ, அவர்களது நம்பிக்கையை கட்டியெழுப்பவோ இயலாதிருந்திருக்கின்றோம் என்பதைப் பொறுப்புடன் ஏற்றுக்கொள்ளுகின்ற சந்தர்ப்பம் ஒன்றை இந்தத் தேர்தல் எங்களுக்குத் தந்திருக்கின்றது.

கூருணர்வு மிக்க அரசியல் திறன், அணுகுமுறை மற்றும் சர்வதேச சமூகத்தின் வாஞ்சையைப் பெற்றுக்கொள்ளல் என்பதில் நிலைதளர்ந்து போயுள்ள சூழல் குறித்து தமிழ்த் தேசிய ஆர்வலர்களிடமும், அறிவுஜீவிகளிடமும், சாதாரண பொதுமக்களிடமும் எதிர்காலம் பற்றிய ஐயுறு நிலை அதிகம் வளர்ந்துள்ளமையை மக்கள் பிரதிபலித்து வருகிறார்கள் என்பதை எம்மால் உணர முடிகின்றது.

மேற்படி இக்கட்டான சந்தர்ப்பம் ஒன்றில் போரின்போதும், போருக்குப் பின்னரும் நிகழ்ந்துவரும் இழப்புகளுக்கு பரிகாரம் காணவும், சர்வதேச அணுகுமுறைகளில் விருத்தியை ஏற்படுத்தவும், ஜெனிவாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானங்களை வலுப்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிலைமாறுகால நீதிச் செயற்பாட்டை வழிப்படுத்தவும், மீள நிகழாமையை வலியுறுத்தி தாயகத்தில் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றைக் கோரவும் முன்னகர்ந்து செல்லவேண்டிய தலைமைத்துவத்தை எமது மக்கள் எதிர்பார்த்து இருக்கின்றார்கள்.

அறிவுபூர்வமானது என்று நம்பப்படும் கருத்தியல்களுக்கும், எமது மக்களினுடைய உணர்வு நிலைகளுக்கும் இடையிலான போராட்டமாக இந்தத் தேர்தல் களம் விரிந்துள்ளமையால், மக்கள் எது சாத்தியம் என்று நம்புகின்றார்களோ, அவற்றைக் கவனமாக ஆராய்ந்து, தமிழ்த்தேசிய உணர்வுத் தளத்துடன் இணைந்த தீர்மானம் ஒன்றை, அதன் உயிர்நாடியாக விளங்குகின்ற இல்கைத் தமிழரசுக் கட்சி தீர்க்கமான முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே பெரும்பான்மைத் தமிழ் மக்களுடைய கருத்துநிலையாக உள்ளது என்பதை தங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

மேற்படி விடயங்கள் ஒவ்வொன்றையும் மக்கள் மத்தியிலும், அரசியல் ஆர்வலர்கள் மத்தியிலும் பொதுசன அபிப்பிராயமாகப் பெற்று எமது மாவட்டக் கிளையும், பிரதேசக் கிளைகளும், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களும் இணைந்து, கள யதார்த்தத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய கொள்கை நிலைப்பாட்டைப் பாதுகாத்து, மக்கள் மத்தியில் எமது அரசியல் இயக்கம் நெருங்கிச் செயற்படும் வகையில் தாயகத்தின் சிவில் அமைப்புகளினாலும், தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள பெரும்பான்மைக் கட்சிகளினாலும் முன்மொழியப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டுமென்ற ஏகமனதான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம் என்பதை தங்களுக்கு தயவுடன் அறியத் தருகின்றோம்.” – என்றுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டத்தில் 2024 ஆகஸ்ட் 15 ஆம் திகதிக்கும் (வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்பட்ட சமயம்) செப்டம்பர் 22 ஆம் திகதிக்கும் (வாக்களிப்பு முடிந்த தினத்துக்கு அடுத்த நாளும்) இடைப்பட்ட காலத்தைத் தவிர்த்து மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்த முடியும் என்று தெளிவாக அறிவுறுத்தப்பட்டுள்ளது எனப் பதிலளிக்கப்பட்டது.

இதன்படி பார்த்தால், கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் நடத்தப்பட்ட கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் தேர்தல் ஆணையத்தின் முடிவை மீறி நடத்தப்பட்டவையாகவே அர்த்தம் கொள்ளப்பட வேண்டும்.

இது விடயத்தில் தேர்தல் ஆணையம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமோ தெரியவில்லை. பார்த்திருப்போம்.

+ + +

நமது வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் குறித்து நேற்று முன்தினம் இப்பத்தியில் ஒரு குறிப்பு வரைந்திருந்தேன்.

வெளிநாட்டில் மருத்துவப் பட்டம் பெற்ற பலர் நமது பிரதேசத்தில் பணியாற்றுகின்றார்கள் என்றும், அவர்கள் இங்கு இலங்கையில் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெறாதவர்கள் என்ற சாரப்படவும் கருத்து வெளியிடப்பட்டிருந்தது.

ஆவண ரீதியில் அது சரியான தகவல் எனினும், அது அத்தகைய மருத்துவர்களின் கல்வித் தகுதி – தகைமை – தொடர்பில் தேவையற்ற சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டதாக மருத்துவத் துறையினர் சிலர் சீற்றத்துடன் சுட்டிக்காட்டினர். அவர்களின் சீற்றத்துக்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன என்றே நினைக்கிறேன்.

வெளிநாட்டில் மருத்துவப் பட்டம் பெறுவதற்கு இலங்கையின் ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. அந்தந்த நாட்டின் மருத்துவக் கல்லூரி அனுமதிக்கான தகுதி பெற்றிருந்தால் போதுமானது.

நமது நாட்டிலேயே பாடசாலை – கல்லூரி – படிப்பை இங்குள்ள சர்வதேச கல்லூரிகளில் பூர்த்தி செய்யும் மாணவர்கள் இலங்கையின் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதில்லை. அவர்கள் கேம்பிரிட்ஜ் அல்லது எடக்ஸல் போன்ற லண்டன் பரீட்சைகளுக்குத் தோற்றி அந்தப் பெறுபேறுகள் மூலம் சர்வதேச பல்கலைக்கழக அனுமதிகளைப் பெறுவது வழமை. அவர்கள் மருத்துவத் துறை என்றல்ல, பொறியியல் துறையில் இருந்து எல்லாத் துறைகளிலும் பட்டதாரிகளாக வெளிவருவதும், இலங்கையில் கூட தாம் சார்ந்த துறைகளில் அவர்கள் பணியாற்றுவதும், அத்தகுதியின் அடிப்படையில் உயர் பதவியில் இருப்பதும் வழமை. அவர்களுக்கு இலங்கையின் ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சையில் சித்தி இல்லை என்பதற்காக அவர்கள் தரம் குறைந்தவர்களாகி விட மாட்டார்கள்.

இவ்விடயத்தை ஒட்டி மருத்துவத் துறை சார்ந்த ஓர் அலுவலர் ஒரு குறிப்பை அனுப்பி இருந்தார். அதன் விவரம் வருமாறு:–

1. இலங்கையில் மருத்துவத் தொழில் செய்வதற்கு இலங்கை மருத்துவ சங்கத்தில் (Srilanka Medical Council) பதிவு பெற்றிருக்க வேண்டும். இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் மருத்துவப் படிப்பை முடித்தவர்கள் மற்றும் இலங்கை மருத்துவ சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் மருத்துவப்பட்டம் பெற்ற ஒருவர் பதிவை மேற்கொள்ளத் தகுதியுடையவராவார். அவ்வாறு வெளிநாட்டில் மருத்துவப்பட்டம் பெற்றவர் இலங்கை மருத்துவ சங்கத்தில் பதிவை மேற்கொள்ள அவர்களினால் நடாத்தப்படும் ERPM (Act 16) பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். வெளிநாட்டில் மருத்துவப் பட்டம் பெற்றிருந்தாலும் ஜி.சி.ஈ. உயர் தரப் பரீட்சையில் உயிரியல் துறையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் (2C, 1S).

2.பிரித்தானியாவிலும் அதன் கொலனிகளாக இருந்த நாடுகளிலும் இவ்வாறாக ஜி.சி.ஈ. உயர்தரம் பட்டப்படிப்பிற்கான தடைதாண்டல் பரீட்சையாக இருந்தாலும் ஏனையநாடுகள் தமக்கான பிரத்தியேக நடைமுறைகளை கொண்டுள்ளன. பெரும்பாலான கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தரம் 10ஐ பட்டப்படிப்பை தொடங்குவதற்கான தடைதாண்டல் பரீட்சையாக கொண்டுள்ளன (University Entrance Exam). இவ்வாறான திட்டமுள்ள நாடுகளில் மருத்துவப் பட்டப்படிப்பின் முதல் ஒன்றரை வருடங்கள் மருத்துவத்துறைக்கு அவசியமான இரசாயனவியல், உயிரியல் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்களை போதிக்கிறார்கள், எனவேதான் மருத்துவ பட்டம் பெறுவதற்கு அந்நாடுகளில் 6 வருடங்கள் கற்கை நடைபெறுகிறது(இலங்கையில் நான்கரை – ஐந்து வருடங்கள்)

3.இலங்கையில் இருந்து – குறிப்பாக இலங்கையில் உள்ள சர்வதேச பாடசாலைகளில் இருந்து க.பொ.சா. தரத்துடன் வெளிநாடொன்றுக்கு மருத்துவ பட்டப்படிப்பிற்கு செல்வதானால் அவர்கள் ஒருவருட மருத்துவ பட்டமுன்படிப்பை நிறைவுசெய்து அதன் பின்னர் வழமையான 6 வருட மருத்துவ பட்டப்படிப்பை மேற்கொள்வார்கள். இருந்தபோதிலும் அவ்வாறானவர்களிற்கு இலங்கையில் மருத்துவ தொழிலிற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. அவ்வாறான பலர் ஐரோப்பிய மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் மருத்துவ தொழில்புரிகிறார்கள்.

– என்று அந்த விளக்கம் உள்ளது.

எனது நேற்று முந்தைய நாள் குறிப்பினால் பலருக்கும் ஏற்பட்ட ஆதங்கங்களுக்கு இந்த விளக்கங்கள் நல்ல ஒத்தடமாக அமைந்திருக்கும் என நினைக்கிறேன்.

---

## புதிய அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள புதிய அரசியல் கூட்டமைப்பு எதிர்வரும் செப்டெம்பர் 5 ஆம் திகதி அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது.

ஜன ஜய பெரமுன என்ற பெயரில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் இந்தப் புதிய கூட்டணி உதயமாகும்.

இந்தப் புதிய அரசியல் கூட்டமைப்பு இனி வரும் சகல தேர்தல்களிலும் வேட்பாளர்களை நிறுத்த உத்தேசித்துள்ளது.

முதற்கட்டமாக எல்பிட்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை எதிர்வரும் செப்டெம்பர் 12 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க ஜனஜய பெரமுன தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ளக்கூடிய பரந்த கூட்டணியே இந்தப் புதிய கூட்டணி என்று இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், 2023ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலின்படி, வாக்களிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தால், புதிதாக ஒரு இலட்சம் இளைஞர் சமூகம் வாக்களிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் கூறியுள்ளார்.

---

## பிரதான வேட்பாளர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொருளாதார ஒத்துழைப்பு, இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகருக்கும் இடையில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பின் நிறைவில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுடன் அஜித் டோவல் கலந்துரையாடினார்

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸவையும் அஜித் டோவல் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரமாக நீண்ட பரஸ்பர கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இதன்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் பேசப்பட்டது.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்கவையும் அஜித் டோவல் சந்தித்துப் பேசினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் இருவரும் கலந்துரையாடினர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவையும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டன. ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் இதன்போது இருவரும் கலந்துரையாடினர்.

இலங்கையில் எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் புதுடில்லியின் செய்திகளுடன் கொழும்பு வந்துள்ள அஜித் டோவல், பிரதான வேட்பாளர்கள் நால்வரையும் தனித்தனியே சந்தித்துப் பேசியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படிசந்திப்பின்ஊடாகஜனாதிபதித் தேர்தலில் எவர் வெற்றி பெற்றாலும் இணைந்து செயற்படத் தயார் என்ற மறைமுக செய்தியையே சர்வதேசத்துக்கு இந்தியா வெளிப்படுத்தியுள்ளது என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.




# உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுக்கள் தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற தீர்மானம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்ட மாஅதிபரின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தமையின் ஊடாக அதற்காக முன்வைக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புற தெரிவித்துள்ளார்.

அந்த வேட்புமனுக்களின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட்டால் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்கு வாக்களிக்க முடியாது போகுமென இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புற தெரிவித்துள்ளார்.

அதேபோன்று 18 வயது பூர்த்தியடைந்த மேலும் சிலர் தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்க முடியாத நிலை ஏற்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# பதவியிலிருந்து நீக்குவது தொடர்பில் அறிவிக்கப்படவில்லை என்கிறார் பாலித

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தம்மை நீக்கியுள்ளனர் என இதுவரை எந்தவித அறிவிப்புக்களும் விடுக்கப்படவில்லை என அந்தக் கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து அவரை விலக்கியமைக்கான கடிதத்தில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிட்டுள்ளார் என தேசிய நாளிதழ்கள் நேற்று செய்தி வெளியிட்டிருந்தன.




இந்த விடயம் தொடர்பில் பாலித்த ரங்கே பண்டார கருத்து தெரிவிக்கையில், அவ்வாறான எந்த அறிவிப்புகளும் தமக்கு இதுவரை விடுக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தாமே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராகச் செயற்படுவதாகவும் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பொதுச்செயலாளர் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பான கடிதம் பாலித்த ரங்கே பண்டாரவிற்கு விரைவில் அனுப்பப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# வடக்கு - கிழக்கு தமிழர் வாக்கு ஒற்றுமையைப் பிரதிபலிக்கும்

## தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேத்திரன் தெரிவிப்பு

"தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் தமிழ் மக்கள் ஓரணியாக இருக்கின்றார்கள் என்ற செய்தியைச் சொல்வதற்கு எனக்கு வாக்களியுங்கள்." – என்று தமிழ் மக்களிடம் கோரியுள்ளார் தமிழ்ப் பொதுவேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சிங்களத் தலைவர்களால் காலங்காலமாகத் தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரான நான் போட்டியிட்டாலும் வெற்றி பெற்று ஜனாதிபதியாக வரப் போவதில்லை. ஆனால், சிங்களத் தரப்புக்கும், சர்வதேசத்துக்கும் எனக்கு அளிக்கப்படும் வாக்குகள் பலமான செய்தியைச் சொல்லும். தமிழ் மக்கள் ஓரணியில் நிற்கின்றார்கள் என்பதே அந்தச் செய்தி.

அடுத்தது தமிழர்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன என்பதை வெளியுலகத்துக்குக் கொண்டு செல்ல முடியும்." – என்றார்.



# 25 நாள்களில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகை

இந்த வருடத்தில் ஆகஸ்ட் மாதத்தின் முதல் 25 நாள்களில் ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 622 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 27 ஆயிரத்து 999 ஆகும்.

இந்தநிலையில், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 15 ஆயிரத்து 918 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 10 ஆயிரத்து 68 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 9 ஆயிரத்து 162 சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 13 இலட்சத்து 41 ஆயிரத்து 681 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாட்டைப் பீடித்த பிணி!

இலங்கையின் கடந்த முப்பது வருட அரசியலில் ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலின் போதும் இடம்பெறும் ஒரு பொதுவான அம்சம் உண்டு.

அது, நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்ப தான தேர்தல் வாக்குறுதிதான்.

இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை நடைமுறைக்கு வந்து 47 ஆண்டுகளாகிவிட்டன. கடந்த முப்பது ஆண்டுகளாக அதை மாற்றுவது பற்றிய ஆரவாரங்கள் பெரிய எடுப்பாக அவ்வப் போது மேற்கொள்ளப்பட்டாலும் அந்தக் கட்டமைப்பை அசைக்க முடியவில்லை என்பதுதான் யதார்த்தம்.

அரசு நிர்வாகத்தில் பல்வேறு அதிகார துஷ்பிரயோகங்கள், ஊழல்கள், மோசடி கள், முறைகேடுகள், பொறுப்புக் கூற லின்மை, குற்ற விலக்களிப்பு போன்ற மோசமான அம்சங்கள் சர்வ சாதாரண மாக இடம் பெறுவதற்கு இந்த ஆட்சி முறைமைதான் பிரதான காரணம் என்பது கண்கூடு.

டி.பி.விஜேதுங்காவுக்குப் பின்னர் ஆட் சிக்கு அதிகாரத்துக்கு வந்த அனைத்து ஜனாதிபதிகளும் - கோட்டாபய ராஜ பக்ஷவைத் தவிர - இந்த நிறைவேற்றதி கார ஜனாதிபதி ஆட்சி முறைமையை இல்லாதொழிப்போம் என்று எழுத்தில் பொதுமக்களுடன் ஓர் உடன்பாடு கண்டு தான் பதவிக்கு வந்தார்கள்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறி சேன, ரணில் விக்கிரமசிங்க என யாரும் இதற்கு விதிவிலக்கல்லர்.

இதில் மஹிந்த ராஜபக்ஷ தம் ஒரு தடவை ஜனாதிபதிப் பதவியில் அமர்வ தோடு அந்த ஆட்சி முறைமைக்கு முற்றுப் புள்ளி வைப்பேன் என்று நாட்டுக்கு மக் களுக்கு எழுத்தில் உறுதி வழங்கித்தான் அதிகாரத்தை பெற்றார். ஆனால் பின் னர் சட்டத்தை தமக்கு ஏற்றவாறு மாற்றி, மூன்றாவது முறையும் கூட ஜனாதிபதி யாவதற்காக தேர்தலில் போட்டியிட்டார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பேன் என்று மக்க ளுக்கு உறுதிமொழி கூறாமல் அதிகாரத் துக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ தான் அந்த ஆட்சிமுறையில் இரண் டரை வருடங்களுக்கு மேல் நீடித்துத் தாக்குப் பிடிக்க முடியாமல், பதவியை விட்டு ஓட்டம் பிடித்தார். ஆனால் அந்த ஆட்சி முறைமையை ஒழிப் போம் என்று மக்களுக்கு வாக்குறுதி அளித்து, அதன் அடிப்படையில் அதி காரத்துக்கு வந்த மற்றவர்கள் எல்லோ ரும் அந்தப் பதவியை விட்டு விட முடி யாமல் அதை கட்டிப்பிடித்துக் கொண் டிருக்கும் அவலத்தை காண்கி றோம்.

நிறைவேற்றதிகாரத்துக்கு வந்ததும், அந்த ஆட்சி முறைமையை ஒழிப்போம் என்று தாங்கள் முன்னர் கொடுத்த வாக்குறுதி அவர்களுக்கு மறந்து விடு வது வழமைதான்.

இந்தத் தடவையும் ஜனாதிபதி தேர் தலின் மூன்று பிரதான வேட்பாளர் களும் - ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திச நாயக்க ஆகிய மூவரும் - நிறைவேற்றதி கார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்போம் என்ற வாக்குறுதியை ஏதோ ஒரு வடிவத்தில் மக்களுக்கு வழங்கி இருக்கின்றார்கள். அந்த விடயம் அவர்களின் தேர்தல் விஞ்ஞாப னத்தில்வலிமையாக-தெளிவாக-குறிப் பிடப்பட்டிருக்கின்றது.

இந்தத் தேர்தலில் ஒருவர் வெல்ல, அதன் பின்னரும் தங்களுக்குள் முட்டி, மோதி, முரண்பட்டு, எதிரெதிர்த் திசையில் அமரப் போகின்ற இத்தரப் புகள், அப்படி இருந்து கொண்டும் ஒன்று சேர்ந்து இந்த முறைமையை ஒழிக்க முயற்சிக்க மாட்டார் என்பது திண்ணம்.

பதவிக்கு வருபவர்களுக்கு அந்த அதிகாரத்தை தொடர்ந்து ருசிக்க ஆசை நீடிக்கும். வெளியில் நிற்பவ ருக்கு அடுத்த தடவை அந்தப் பதவியை தாம் கைப்பற்றி, அதிகாரத்தை ருசித்து விட வேண்டும் என்ற வேணவா தொட ரும்.

இதனால் நிறைவேற்றதிகார ஜனாதி பதி முறைமை ஒழிப்பு என்ற விவகா ரம் வெளிப் பேச்சோடு இன்னும் பல தசாப்த காலம் நீடிக்கும். அது பிணி யாக இலங்கையை விட்டு நீங்காமல், பற்றிப் பிடித்து நாட்டை குட்டிச் சுவ ராக்கி கொண்டிருக்கும் என்பது உறுதி.

# இந்திய பணக்காரர் பட்டியல் முதலிடம் பிடித்தார் அதானி



2024 ஆம் ஆண்டுக்கான ஹுரூன் இந்தியா பணக்காரர்கள் பட்டியலில், முதலிடத்தில் இருந்த வந்த முகேஷ் அம்பானியை பின்னுக்குத் தள்ளி இந்தியாவின் பணக்காரர் பட்டியலில் முதலிடம் பிடித்தார் கௌதம் அதானி மற்றும் அவரது குடும்பத்தினர்.

இந்தியாவின் முதல் பணக்காரர் என்ற அந்தஸ்தைப் பிடித்திருக்கும் கௌதம் அதானியின் சொத்து மதிப்பு 11.6 லட்சம் கோடி ரூபா. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 29 சதவீதம் அதிகமாகும்.

2024 ஆம் ஆண்டு ஜுலை 31 ஆம் திகதி தரவுகளின் படி, சொத்து மதிப்பு கணக்கிடப்பட்டு இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான ஹுரூன் இந்தியா பணக்காரர் பட்டியலில், கௌதம் அதானி மற்றும் அவரது குடும்பத்தினர், நாட்டின் முதல் பணக்காரர் என்ற அடையாளத்தோடு இருந்த வந்த முகேஷ் அம்பானியை பின்னுக்குத்தள்ளிவிட்டு, 11.6 லட்சம் கோடி ரூபா சொத்து மதிப்புடன் முதல் இடத்தைப் பிடித்துள்ளனர்.

முகேஷ் அம்பானி 10.1 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் இரண்டாம் இடத்தில் உள்ளார். ஷிவ் நாடார் மற்றும் அவரது குடும்பத்தினர் 3.14 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் மூன்றாவது இடத்தில் உள்ளனர்.

# பாகிஸ்தானுடனான பேச்சு சகாப்தம் முடிந்துவிட்டது

## வெளியுறவு அமைச்சர் திட்டவட்டம்

பாகிஸ்தானுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவது என்ற சகாப்தம் முடிந்துவிட்டதாக தான் நினைப்பதாக வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.


“மூலோபாய புதிர்கள்: இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை மறுவடிவமைத்தல்“ என்ற தூதர் ராஜீவ் சிக்ரியின் புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய வெளியுறவுத் துறை அமைச்சர், இந்தியாவின் அண்டை நாடுகளுடனான உறவுகள் குறித்து வெளிப்படையாகப் பேசினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பாகிஸ்தானுடனான இடைவிடாத பேச்சுவார்த்தையின் சகாப்தம் முடிந்துவிட்டது என்று நான் நினைக்கிறேன். பாகிஸ்தானின் செயல்களுக்கு விளைவுகள் உண்டு. ஜம்மு–காஷ்மீரைப் பொறுத்தவரை, சட்டப்பிரிவு 370 நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதில் மாற்றமில்லை. எனவே, பாகிஸ்தானுடன் என்ன வகையான உறவைப் பற்றி சிந்திக்கலாம் என்பதுதான் இன்றைய பிரச்சினை.

பாகிஸ்தான் உடனான உறவைப் பொறுத்தவரை, தற்போதுள்ள நிலையை தொடர்வதில் இந்தியா திருப்தி அடையலாம் என்று ராஜீவ் சிக்ரி தனது புத்தகத்தில் பரிந்துரைத்துள்ளார். சில நேரங்களில் ஆம் என்றும், சில நேரங்களில் இல்லை என்றும் இதற்கு பதில் சொல்லலாம். அமைதியாக இருப்பவர்கள் அல்ல நாங்கள். நிகழ்வுகள் நேர்மறையாக இருந்தாலும் எதிர்மறையாக இருந்தாலும் அதற்கு நாங்கள் எதிர்வினையாற்றுவோம்.

ஆப்கானிஸ்தானைப் பொறுத்தமட்டில், இந்திய – ஆப்கனிய மக்களுக்கு இடையேயான உறவு வலுவானதாக இருக்கிறது. ஆப்கன் சமூகத்தின் மீது இந்தியாவுக்கு நல்லெண்ணம் உள்ளது. ஆனால் நாம் ஆப்கானிஸ்தான் எனும்போது, அங்குள்ள அரசாங்கத்தின் அடிப்படைகள் குறித்து நாம் மறந்துவிடக் கூடாது என்று நான் நினைக்கிறேன்.




ஆப்கானிஸ்தானில் சர்வதேச உறவுகளுக்கு மதிப்பிருக்கிறது. இன்று நாம் நமது ஆப்கானிய கொள்கையை மறுபரிசீலனை செய்யும்போது, நமது நலன்கள் பற்றி நாங்கள் மிகவும் தெளிவாகக் கவனிக்கிறோம். நமக்கு முன்னால் இருக்கும் “பரம்பரை ஞானத்தால்” நாம் குழப்பமடையவில்லை. அமெரிக்க படைகள் இருக்கும் ஆப்கானிஸ்தான், அமெரிக்க படைகள் இல்லாத ஆப்கானிஸ்தானில் இருந்து மிகவும் வித்தியாசமானது. இதற்காக நாம் அந்நாட்டை பாராட்ட வேண்டும்.

பங்களாதேஷை பொறுத்தவரை, அந்த நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து, அந்த நாட்டுடனான நமது உறவு மேலும் கீழுமாகவே இருந்துள்ளது. தற்போது அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது பாதிப்பை ஏற்படுத்தலாம். அதே நேரத்தில், பரஸ்பர நலன்களை கண்டறிவதில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம். இதற்காக தற்போதுள்ள அரசுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தும். மியான்மருடான உறவைப் பொறுத்தவரை, ஒரே நேரத்தில் அது நெருக்கமாகவும் தொலைவாகவும் உள்ளது. அங்குள்ள அரசாங்கம் மற்றும் பிற சக்திகளுக்கு இடையே ஒரு சமநிலையைக் கண்டறிய வேண்டும். ஏனெனில் அதுதான் உண்மை.” – என்றார்.

# காசாவில் போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் - ஹமாஸ் ஒப்புதல்



காசா பகுதியின் பல்வேறு பகுதிகளில் 3 நாள்கள் போரை இடைநிறுத்தம் செய்ய இஸ்ரேலும் ஹமாஸும் ஒப்புக் கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவிலுள்ள குழந்தைகளுக்கான போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்காகவே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காசா பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் மிலேச்சத்தனமான தாக்குதல்களில் இதுவரை 40,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, இந்த போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் இதற்கான ஒப்பந்தங்கள் இன்னும் கையெழுத்தாகாமல் நீடித்துக் கொண்டு இருக்கின்றன.

காசாவிலுள்ள ஆயிரக்கணக்கான குழந்தைகள் போலியோ சொட்டு மருந்து பெறாமல் கடும் அவதிக்குள்ளாகியுள்ள நிலையில் அவர்களுக்கான சொட்டு மருந்து கொடுக்கவில்லை என்றால் ஆபத்து என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்து இருந்தது.

இதனால் போலியோவுக்கு எதிராக காசா முழுவதும் சுமார் 640,000 குழந்தைகளுக்கு முதல் சுற்று தடுப்பூசியை வழங்க உள்ளதாக உலக சுகாதார அமைப்பின் மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும், இதற்கான முதற்கட்ட பிரசாரம் எநாளை தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செங்கடலில் எரியும் எண்ணெய் கப்பல்!






செங்கடலில் கடந்த வாரம் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு இலக்கான எண்ணெய் கப்பல் ஒன்று தொடர்ந்து எரிந்தவண்ணம் இருப்பதாகவும் அதில் இருந்து எண்ணெய் கசியக்கூடும் என்றும் அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பென்டகன் குறிப்பிட்டுள்ளது.

கிரேக்கத்திற்கு சொந்தமான அந்த நாட்டு கொடியுடனான எம்.வி. சவுனியோன் என்ற கப்பலை மீட்கும் முயற்சியை ஹவுத்திக்கள் முறியடித்ததாக பென்டகன் மேலும் தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல் 150,000 தொன்கள் அல்லது ஒரு மில்லியன் பீப்பாய் மசகு எண்ணெயை சுமந்திருக்கும் நிலையில் பெரும் அளவு எண்ணெய் கசிவு ஒன்று ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

காசா போரில் பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக யெமனின் பெரும்பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹவுத்திக்கள் கடந்த 10 மாதங்களுக்கு மேலாக செங்கடலில் செல்லும் கப்பல்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்தத் தாக்குதல்களில் இதுவரை இரு கப்பல்கள் மூழ்கி இருப்பதோடு குறைந்தது இரு கப்பல் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சவுனியோன் கப்பல் மீது கடந்த 21 ஆம் திகதி இரு சிறு படகுகளில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் அடையாளம் காணப்படாத மூன்று எறிகணைகள் விழுந்ததை அடுத்தே கப்பல் தீப்பற்றியுள்ளது.

அதே தினத்தில் ஐரோப்பிய போர் கப்பல் மூலம் கப்பலில் இருந்த 25 பேரும் மீட்கப்பட்டு டிஜிபூட்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

# நீதிமன்றத்தில் இருந்த போதைப்பொருள் மாயம்: சந்தேகநபரை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி




கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குச் சான்று பொருளாக வைக்கப்பட்டிருந்த 12 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் காணாமல்போயுள்ளமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரைத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் வழக்குச் சான்று பொருள்களின் முன்னாள் பொறுப்பாளர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேகநபரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு நீதிவான் அனுமதியளித்துள்ளார்.

# ஆஸ்திரேலியாவில் மனைவியை கொலை செய்த இலங்கையர்!

## அந்நாட்டு உயர் நீதிமன்றில் நிரூபணம்

ஆஸ்திரேலியாவில் இலங்கையர் ஒருவர் தனது மனைவியைக் கொலை செய்தமையை அந்த நாட்டின் உயர் நீதிமன்றம் உறுதிசெய்துள்ளது.

மெல்பேர்னில் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி இலங்கைப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

அவரது கணவரான இலங்கையரால் கத்தியால் தாக்கி அப்பெண் கொலை செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டது.

வழக்கில் தாம் கொலை செய்யவில்லை என்றும் தற்காப்புக்காகவே அவரை தாக்கினார் எனவுன் அந்த இலங்கையர் வாதாடி இருந்தார்.

எவ்வாறாயினும் அவர் கொலை செய்தமையை உயர் நீதிமன்ற விசாரணை உறுதிப்படுத்தியுள்ளது.

இதனை அடுத்து இந்த வழக்கின் தீர்ப்பு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று மெல்பேர்ன் உயர்நீதிமன்றம் தெரிவித்தது.



# பணவீக்கத்தில் வீழ்ச்சி!

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் இந்த மாதம் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஜூலை மாதத்தில் 2.4 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் 0.5 சதவீதமாக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அதேநேரம், உணவு பணவீக்கம், ஓகஸ்ட் மாதத்தில் 0.8 சதவீதமாகவும் உணவல்லாப் பணவீக்கம் 0.4 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



# எங்கள் ஆட்சியில் புதிய கல்வி முறை

## பரப்புரைக் கூட்டத்தில் அநுரகுமார தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் புதிய கல்வி முறைமை ஸ்தாபிக்கப்படும் என்று அதன் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பொலனறுவையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் வைத்து அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பல அரசுகளை ஸ்தாபித்த நாட்டு மக்கள் தற்போது வெறுப்படைந்துள்ளனர். தேவையாயின் இந்த நாட்டைச் செல்வந்த நாடாக மாற்ற முடியும்.

இந்த வாழ்க்கை முறைமையை விட புதிய வாழ்க்கை முறையையே மக்கள் விரும்புகின்றனர். நாட்டின் எதிர்காலம் தொடர்பில் இளைஞர்கள் நம்பிக்கையின்மையுடன் உள்ளனர்.

எந்தத் தருணத்தில் இந்த நாட்டை விட்டு வெளியேறுவோம் என்ற எண்ணத்தில் இளைஞர்கள் இருக்கின் றார்கள். சகல வழிகளிலும் துன்பங் களையே மக்கள் அனுபவித்து வரு கின்றனர்.

கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும்.” – என்றார்.











# காணாமல் ஆக்கப்பட்டோருக்குச் சர்வதேச நீதி கோரி இலண்டனில் நேற்று பெரும் கவனவீர்ப்புப் போராட்டம்


சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பிரித்தானியாவில் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இலண்டனில் நேற்று நடைபெற்றது.

பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்கள் பெருந்திரளாக இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு இலங்கையில் இடம்பெற்ற போரில் தமிழினப் படுகொலைக்கு நீதி கோரியதுடன், போரின்போது காணாமல் ஆக்கப்பட்டோருக்குச் சர்வதேச நீதியை வழங்கத் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிரித்தானிய அரசிடமும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் கனடா, அமெரிக்காவிடமும் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டிலும், சிவில் அமைப்புகளின் ஏற்பாட்டிலும் நேற்று பெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.







# ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் முறை: தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிவிப்பு

வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்களிக்கும் ஒழுங்கு முறையைத் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

மூன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமையால் ஒரு வேட்பாளருக்கு வாக்கையும், வேறு இரண்டு வேட்பாளர்களுக்கு இரண்டாவது விருப்பு தெரிவையும் மற்றும் மூன்றாவது விருப்பு தெரிவையும் வாக்குச்சீட்டில் அடையாளமிடுவதற்கான சாத்தியப்பாடு காணப்படுவதோடு, அவசியமெனில் வாக்கை மாத்திரம் அடையாளமிடுவதற்கும் சாத்தியம் காணப்படுகின்றது.



Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல. PRE/2024/56 — 2024.08.30

**சனாதிபதித் தேர்தல் - 2024**
**வாக்களிக்கும் ஒழுங்கு.**

2024 செப்தெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலின் போது மூன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமையினால் ஒரு வேட்பாளருக்கு வாக்கையும், வேறு இரண்டு வேட்பாளர்களுக்கு இரண்டாவது விருப்புத் தெரிவையும் மற்றும் மூன்றாவது விருப்புத் தெரிவையும் வாக்குச்சீட்டில் அடையாளமிடுவதற்கான சாத்தியப்பாடு காணப்படுவதோடு, அவசியமெனில் வாக்கை மாத்திரம் அடையாளமிடுவதற்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

வாக்காளர் வாக்குச்சீட்டில் தனக்கு விருப்பமான வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னத்திற்கு எதிரில் அதற்கென குறித்தொதுக்கப்பட்டுள்ள பகுதியில் 1 என்ற இலக்கத்தைக் குறித்து வாக்கைப் பிரயோகித்தல் வேண்டும். அதன் பின்னர் 2 மற்றும் 3 என்ற இலக்கங்களைக் குறிப்பதன் மூலம் தனது இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்புத் தெரிவைக் குறிப்பிட முடியும். வாக்குச்சீட்டொன்றில் வாக்காளர் தனது இரண்டாவது அல்லது மூன்றாவது விருப்புத் தெரிவுகளை அடையாளமிடவில்லையெனினும் அதில் முறையானவாறு ஒரு வேட்பாளருக்கு அடையாளமிடப்பட்ட வாக்கொன்று காணப்படின் அது செல்லுப்படியான வாக்கொன்றாக ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கமைய சட்டரீதியாக செல்லுபடியான வாக்கு மற்றும் விருப்புத் தெரிவுகளை அடையாளமிடக்ககூடிய முறைகள் கீழே படங்களில் காட்டப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ABC | □ | |
| XYZ | ⬠ | 1 |
| IOU | △ | |
| PQR | ◇ | |
| LMN | ○ | |

| | | |
|---|---|---|
| ABC | □ | |
| XYZ | ⬠ | 1 |
| IOU | △ | |
| PQR | ◇ | 2 |
| LMN | ○ | |

| | | |
|---|---|---|
| ABC | □ | |
| XYZ | ⬠ | 1 |
| IOU | △ | |
| PQR | ◇ | 2 |
| LMN | ○ | 3 |

மேற்படி முறைகள் தவிர வாக்காளரின் வாக்களிக்கும் உளக்கருத்து வாக்குச்சீட்டின் மீது இடப்பட்ட ஏதேனும் அடையாளமொன்றினால் தெளிவாகத் தெரிகின்றவிடத்து (உதாரணமாக X மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ள போது) அதனை வாக்காளருக்கு அளிக்கப்பட்ட வாக்கொன்றாகக் கருதப்படும்.

வாக்காளரை அடையாளம் கண்டுகொள்ளக்கூடியவாறு ஏதேனுமொன்று எழுதப்பட்ட அல்லது அடையாளமிடப்பட்ட வாக்குச்சீட்டொன்று போன்றே கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டொன்றும் வாக்கொண்ணலின் போது நிராகரிக்கப்படும். அதாவது ;

- எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்கு அடையாளமிடப்படாதுள்ள போது,
- ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்காக வாக்கு அடையாளமிடப்பட்டுள்ள போது,
- ஒரு வேட்பாளருக்கு 1 மற்றும் மற்றொருவருக்கு X அடையாளமிடப்பட்டுள்ள போது,
- இரண்டாவது விருப்புத் தெரிவு அல்லது மூன்றாவது விருப்புத் தெரிவு மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ள போது,
- வாக்காளரை அடையாளம் கண்டுகொள்ளக்கூடியதான ஏதேனுமொன்று எழுதப்பட்டிருப்பின் அல்லது வரையப்பட்டுள்ள போது,
- **1** தவிர்ந்த வேறு அடையாளமொன்றுடன் **2,3** விருப்புத் தெரிவுகள் அடையாளமிடப்பட்டுள்ள போது,
- **1,2,3** ஐ விட வாக்கு மற்றும் விருப்புத் தெரிவுகள் அடையாளமிடப்பட்டுள்ள போது,

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு

# இன்றைய ராசி பலன்கள் - 31.08.2024




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள்.

இன்று உங்களின் பெரும்பான்மையான ஆற்றலைப் பயன்படுத்துவீர்கள். அது உங்கள் பணியில் பிரதிபலிக்கும். உங்களின் தனித் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக அதே சமயம் நகைச்சுவை உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே புரிந்துணர்வும் நல்லிணக்கமும் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களின் உற்சாகமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்றைய நாள் அனுகூலம் குறைந்து காணப்படும். வெற்றியைப் பெற பொறுமை அவசியம். நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரலாம். எனவே திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். எவ்வளவு கடினமாக உழைத்தாலும் பலன் இருக்காது. உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையுடனான உறவு குறித்து பெரியவர்கள் ஆலோசனை வழங்கினாலும் நீங்கள் கேட்கும் மனநிலையில் இருக்க மாட்டீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையில் மோதல்கள் ஏற்படும்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. தேவையற்ற விஷயங்களுக்கு பதட்டமடைவீர்கள் அதனை தவிர்த்து உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

பணியில் நல்ல பெயர் எடுப்பதற்கான சாத்தியம் இல்லை. இதனால் உங்களுக்கு வருத்தம் ஏற்படும். உங்கள் சகபணியாளர்களை நண்பர்கள் போல கருதிப் பழக வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையுடன் சுமூக உறவு கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அப்பொழுதுதான் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

சம்பாதித்த பணத்தை இன்று குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள்.




இன்று வெற்றிகரமான நாளாக அமையும். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களிடம் அதிக ஆற்றல் மற்றும் விழிப்புணர்வு காணப்படும்.அவை உங்களின் வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் பணியில் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். பணிகளை தன்னிச்சையாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியத்தை சிறப்பாக பாரமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக திடமாக இருப்பீர்கள்.




இன்று மன உளைச்சல் காணப்படும். பாடல்கள் கேட்பது அல்லது திரைப்படங்கள் பார்ப்பது போன்ற நிகழ்சிகள் மூலம் மனதில் மகிழ்ச்சி ஏற்படுத்திக் கொள்ளலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று பணிகள் மலை போல் குவிந்து கொண்டே இருக்கும். இதனால் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அதிக பணம் சேர்ப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே காணப்படும்.

ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது.




இன்று நற்பலன்கள் கூடுதலாக கிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். சிறிய முயற்சிகள் கூட இன்று வெற்றியை அளிக்கும்.

நீங்கள் செய்யும் பணியில் சிறப்பான வளர்ச்சி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் வருமானம் உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.




கூடுதல் பொறுப்புகள் காரணமாக இன்று உங்கள் செயல்களை செய்வது கடினமாக உணர்வீர்கள். இன்று அமைதியின்மை காணப்படும். நேர்மறை எண்ணம் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

இன்று பணிச்சுமைகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.

கருத்து வேறுபாடு காரணமாக துணையுடன் மோதல்கள் காணப்படும். இருவரும் மகிழ்ச்சியாக இருக்க இந்த வேறுபாடுகளை களைவது சிறந்தது. புத பகவான் உறவின் நல்லிணக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துவார்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக காணப்படும்.இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தொண்டை சம்பந்தமான பாதிப்புகள் காணப்படும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதியும் ஈடுபாடும் தடைகளை வெற்றிப் படிகளாக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இந்தப் பயணம் உங்களுக்கு மகிழ்ச்சிகரமானதாக அமையாது. விரும்பத்தாகத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் துணையுடம் அமைதியாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். எனவே சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு மகிழ்ச்சி அடையும் நிலை காணப்படாது.

இன்று பதற்றம் காணப்படும். நீங்கள் அதிகப்படியாக வருத்திக் கொள்ள வேண்டாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.08.2024




இன்றைய நாளில் அனுகூலம் சற்று குறைந்து காணப்படும். நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

பணிகளைப் பொறுத்த வரை இன்று சற்று கடினமாக காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு குறைந்து காணப்படும்.

நகைச்சுவை அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணத்தை கடனாக வாங்குவீர்கள். அதன் மூலம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும். விருந்தினர் வரகை உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் மகிழ்ச்சி யாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். இன்று மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அன்பை நிரூபித்துக் காட்டுவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக வளர்ச்சி பெறும். இன்று உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் பணவரவு காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும் இன்று நீங்கள் தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று அமைதியுடன் இருக்க நீங்கள் தைரியம் மற்றும் உறுதியுடன் நம்பிக கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள நீங்கள் நேர்மறை எண்ணத்துடன் இருக்க வேண்டும்.

அதிகமான பணிகள் காரணமாக இன்று நீங்கள் ஓய்வின்றி வேலை செய்வீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற விவாதங்களை தவிர்க்க வேண்டும். உங்களின் மன நிலை தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்பதால் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. வீண் விரயங்கள் காணப்படும்.




நீங்கள் அறிவு பூர்வமாக செயலாற்றுவதன் மூலம் இன்று எழும் பிரச்சினைகளைக் கையாள இயலும். இன்றைய நாளைச் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன்றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிகமாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.ஒவ்வாமை காரணமாக சளி இருமல் போன்ற தொல்லைகள் காணப்படும்.

